இன்று (03.06.2023) மாலை 4 மணிக்கு

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா!

பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தரும் கழகத் தோழர்கள் கவனத்திற்கு!

கூட்டத்தில் கலந்து கொள்ளும் தோழமைக் கட்சி தலைவர்கள் தலைமை கழக நிர்வாகிகள் அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பெரம்பூர் பேரக்ஸ் ரோடு பின்னி மில் மெட்ராஸ் பங்களாவில் நுழைவாயில் 1ல் வாகனத்தை நிறுத்தி விட்டு மேடைக்கு பின்பு உள்ள நுழைவாயிலில் வருகை தருமாறு கேட்டு கொள்கிறேன்.

• மாவட்ட கழக செயாலாளர்கள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் 2வது நுழைவாயில் வழியாக வரவும். வாகனத்தை 10வது நுழைவாயிலில் உள்ள பார்க்கிங்கில் விடவும்.

திரு.வி.க.நகர், எழும்பூர் தொகுதியை சார்ந்த கழக தோழர்கள் பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் உள்ள பார்க்கிங் 12ல் வாகனத்தை நிறுத்தி விட்டு 3வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

• துறைமுகம், ராயபுரம், தொகுதிகளை சார்ந்தவர்கள் பாரதி கலை கல்லூரி வழியாக பேசின் பிரிட்ஜ் புளியந்தோப்பு நெடுஞ்சாலை பெரம்பூர் பேரக்ஸ் சாலை ஆட்டு இறைச்சி கூடம் எதிரில் உள்ள பார்கிங்கில் 12வது நுழைவாயிலில் வாகனத்தை நிறுத்தி விட்டு 4வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

திருவொற்றியூர், R.K.நகர் பெரம்பூர் ஆகிய தொகுதியை சார்ந்த கழக தோழர்கள் சத்திய மூர்த்தி நகர் சாலை வழியாக மூர்த்திங்கர் சாலை, கணேசபுரம் சுரங்க பாதை வழியாக ஆட்டு இறைச்சி கூடம் எதிரில் உள்ள பார்க்கிங் 12ல் வாகனத்தை நிறுத்தி விட்டு 4வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர், வில்லிவாக்கம், ஆகிய தொகுதியை சார்ந்தவர்கள் அம்பத்தூர் OT , பாடி மேம்பாலம் குன்னூர் நெடுஞ்சாலை, குக்ஸ் ரோடு, ஸ்டீபன்சன் ரோடு வழியாக பார்க்கிங் 8 ல் வாகனத்தை நிறுத்தி விட்டு 5வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை மேற்கு மாவட்டம், சென்னை தென்மேற்கு மாவட்டம், சென்னை தெற்கு மாவட்டம், ஆகிய மாவட்டங்களில் இருந்து வருகை தருபவர்கள் கோயம்பேடு பூந்தமல்லி நெடுஞ்சாலை, ஜி.என்.டி.சாலை, அண்ணா சாலை, சிம்சன் சாலை,ஈ.வெ.ரா.சாலை, ரித்தர்டன் சாலை, பெரம்பூர் பேரக்ஸ் சாலை வழியாக பின்னி மில் வாகனம் நிறுத்தும் இடத்திற்கு 8வது நுழைவாயிலில் வாகனத்தை நிறுத்தி விட்டு 6வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

கொளத்தூர்,மாதவரம் தொகுதியை சார்ந்த கழக தோழர்கள் மூலக்கடை மாதவரம் நெடுஞ்சாலை, முரசொலி மாறன் மேம்பாலம் பெரம்பூர் நெடுஞ்சாலை, ஸ்டீபன்சன் சாலையில் உள்ள பார்க்கிங் 8ல் வாகனத்தை நிறுத்தி விட்டு 7வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

• ஸ்டீபன்சன் சாலையில் உள்ள 9வது பார்க்கிங் இரு சக்கர வாகனத்திற்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.

• பார்க்கிங் எண் 11 அவசர தேவைக்கும் வெளியில் செல்வதற்கும் பயன்படுத்த ஒதுக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சிக்கு வாகனத்தில் வருபவர்கள் தயவு கூர்ந்து சாலைகளில் வாகனத்தை நிறுத்தி இறங்காமல் சுமார் 13 ஏக்கர் நிலபரப்பில் அமைக்கப்பட்டுள்ள வாகனம் நிறுத்தும் இடத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு கூட்ட அரங்கிற்கு நடந்து வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: 1வது நுழைவாயிலில் கண்டிப்பாக கார் பாஸ் உள்ளவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு
செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

தெலங்கானா மாநில ஆளுநர்

டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் பிறந்தநாள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜூன் 3-

தெலங்கானா மாநில ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

தெலங்கானா மாநில ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்களின் பிறந்தநாளை யொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தெலங்கானா மாநில ஆளுநரும், புதுச்சேரி துணைநிலை ஆளுநருமான சகோதரி டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்களுக்கு எனது அன்புமிகு பிறந்தநாள் வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

து.தங்கராசு தலைமை - கே.எஸ்.ராஜா முன்னிலை - இள.புகழேந்தி - மேயர் சுந்தரி ராஜா பங்கேற்பு!

கடலூர் மாநகரத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா - முழுஉருவச் சிலை நிறுவப்படும்!

மாநகர கழக செயற்குழுவில் தீர்மானம்

கடலூர், ஜூன் 3 -

கடலூர் மாநகர கழக செயற்குழு கூட்டம், மாநகர கழக அலுவலகத்தில், 31 31.05.2023, மாலை 5 மணியளவில், மாவட்டக் கழக அவைத் தலைவர் து.தங்கராசு தலைமையில் நடைபெற்றது. மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா முன்னிலை வகித்தார்.

கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கடலூர் மேயர் சுந்தரி ராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நூற்றாண்டு நாயகர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்த மக்கள் நலன் திட்டங்களையும் வருங்காலத் தலைமுறையினர் நினைவில் கொள்ளும் வகையில் மாநகரம் முழுவதும் ஓராண்டு முழுவதும், எழுச்சியுடன், மக்கள் நல, சமதர்ம, சமூகநீதி நாளாக கொண்டாடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில், பீகார் முதலமைச்சர் நிதீஷ்குமார் அவர்கள் வரும் ஜூன் 20ம் தேதி திருவாரூரில் நடைப்பெறவுள்ள "கலைஞர் கோட்டக்த்தை "திறந்து வைத்து சிறப்பிக்க உள்ளார். இதில் மாநகர கழகம் சார்பில் திரளாக கலந்து கொள்ளுவது என தீர்மானிக்கப்பட்டது.

கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் 75வது ஆண்டு பவள விழாவினை முன்னிட்டு பழைய கழக கொடி கம்பங்களை புதுப்பிக்க வேண்டும்.

கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு எங்கெங்கும் கலைஞர் என்ற அடிப்படையில் முழு உருவச்சிலை மற்றும் மார்பளவு சிலைகள் மாநகரம் முழுவதும் அமைப்பது என முடிவு செய்யப்பட்டது.

"கழகமே குடும்பம்" எனும் தலைப்பில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கவும், அவர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று மாநகர கழக நிர்வாகிகள் கௌரவிக்கவும், கழக குடும்பங்களைச் சேர்ந்த 100 மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு கல்வி உதவிகளை வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

மாநகர கழகத்தில் அனைவருக்கும் பயன்தரும் வகையில் கணினி, இண்டர்நெட் வசதிகளுடன் நவீன நூலகம், கலைஞர் படிப்பகம் தொடங்குவது என தீர்மானிக்கப்பட்டது.

கழக இளைஞரணி அமைப்பாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி மாநகரின் பகுதிகளில் இளைஞர் அணி சார்பில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் சிறப்பாக நடத்திடுவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மாநகர கழக பொருளாளர் ராஜேந்திரன், பகுதி செயலாளர்கள் ஜி.பி.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, மாநகர துணைச் செயலாளர்கள் பி.சுந்தரமூர்த்தி, ஜி.அகஸ்டின் பிராபாகரன், எல்சா லட்சுமணன், மாவட்டப் பிரதிநிதிகள் சி.என்.கே.ராமு, கி.கோ.செல்வமணி, டி.சிவானந்தம், தா.பிரசன்னா, வி.மாரியப்பன், கோ.இளங்குமார், செந்தில், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கே.எஸ்.ஆர்.பாலாஜி, மாமன்ற உறுப்பினர் ஆராமுது, மாநகர கழக தகவல் தொழில்நுட்ப அணி கே.எஸ்.ஆர்.கார்த்திக், ப.பிரவின், சரத், இளைஞரணி நிர்வாகிகள் மணிகண்டன், பாஸ்கரன், கார் வெங்கடேசன், ஜெயசீலன், லெனின், ஜெயச்சந்திரன், குப்புராஜ், பேச்சாளர் சூரி உள்ளிட்ட மாநகர, பகுதி, மண்டல, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தாயின் தவப் புதல்வர் கலைஞர்!

கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக் குழு உறுப்பினர்

வீழ்வது நாமாக இருந்தாலும், வாழ்வது தமிழாக வேண்டும்" என்பதை வாழ்வின் ஒவ்வொரு நாளும் எண்ணிச் செயலாற்றிட ஒவ்வொருவரும் உறுதி கொள்வோம். என்று தமிழினத் தலைவராக வாழ்ந்து, வரலாற்றில் பொன்னேடுகளைப் பதிவு செய்த கலைஞர் அவர்களின் நூறாவது ஆண்டு பிறந்த நாள் விழா.

"அண்ணா வழியில் அயராது உழைப்போம்! ஆதிக்கம் அற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்! இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம்! வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்! மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி! இப்படியான கல்வெட்டுப் பதிக்கும் ஐம்பெரும் முழக்கங்களைத் தந்து அரசியலில் அதிசயங்கள் படைத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

என் பாதை சுயமரியாதைப் பாதை, 'தமிழின நலம் காக்கும் பாதை பெரியார் பாதை அண்ணாவின் பாதை : அறவழிப்பாதை' அமைதிப் பாதை "பல முனைகளில் என்னைப் பயமுறுத்தினாலும், அந்தப்பாதையில் இருந்து மாற மாட்டேன்." என்று அரசியலில் பெரியாரின் அரிச்சுவடிகளையும், அண்ணாவின் அடிச்சுவடுகளையும் கொண்டு பயணம் செய்தவர் கலைஞர்.

என் பொதுவாழ்வுப் பயணத்தில் இடர், துயர், இன்பம், துன்பம், எதிர்ப்பு, ஆதரவு, ஏச்சு, பேச்சு, இழிவு, பழி என எத்தனையோ விதவிதமான நிகழ்வுகளை எதிர்கொள்ளும் போது, என்னை ஆளாக்கிய பெரியாரையும், அரவணைத்து வழிநடத்திய அண்ணாவையும் நினைத்துக்கொண்டு இலட்சியத்தில் இம்மியளவும் சறுக்கல் இல்லாமல், எச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருக்கிறேன். கழக உடன் பிறப்புகளையும் அன்பெனும் அமுது ஊட்டி ஆதரவு கரம் நீட்டி, துணை நிற்கும் கோடிக்கணக்கான தமிழ்ப் பெருமக்களையும் அரசியலுக்கும், கட்சி பிரச்சினைகளுக்கும், அப்பாற்பட்டு வாழ்த்தி வருகின்ற அனைத்து நெஞ்சங்களையும், தூயத் துணைகளாகத் கொண்டு இந்தத் துணைகள் என்றும் இருக்கும் என்று நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளுடன் எஞ்சியுள்ள பயணத்தைத் தொடர்கிறேன்." என் கடன் பணி செய்து கிடப்பதே. இப்படியாக என்றும் உறுதிமொழி எடுத்து அவர் வாழ்ந்து காட்டியவர்.

முதன் முதலில் அண்ணா அவர்கள் அறிவித்தபடி, தி.மு.க.சட்டமன்ற வேட்பாளராக நின்று குளித்தலையில் கலைஞர் வெற்றி பெற்றார்.. அது முதல் தொடர்ந்து 13 முறை தேர்தல்களில் போட்டியிட்டுத் தோல்வி என்பதே இல்லாமல், வென்று சாதனை படைத்த மாபெரும் தலைவர் கலைஞர் ஆவார். குளித்தலை 1957-1962, தஞ்சாவூர் 1962-1967, சைதாப்பேட்டை (இருமுறை)_ 1967-1971, 1971-1976; அண்ணா நகர் (இருமுறை), 1977 -1980 ; 1980-1983; சட்டமன்ற மேலவை உறுப்பினர் 1984-1986, துறைமுகம் (இருமுறை), 1989 -1991; 1991 (வெற்றி பெற்ற அவர் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகல்.) * சேப்பாக்கம் (மும்முறை) 1996-2001, 2001-2006, 2006- 2011 திருவாரூர் (இருமுறை) 2011-2016; 2016-2018 ஆகஸ்ட் 7. இயற்கை எய்தும் வரை கலைஞர் 13 முறை சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து இருந்து வரலாற்றுச் சாதனை படைத்தவர்.

கலைஞர் அவர்கள் இணையற்ற மனிதநேயம் படைத்தவர். ஓய்விலா உழைப்பாளர்; மக்கள் மனதில் நின்ற வரலாற்றுத் தலைவர்; ஒப்பற்ற தொலைநோக்குச் சிந்தனையாளர்; நிகரற்றப் பேச்சாளர், சிறந்த எழுத்தாளர், நாடக நடிகர்; திரைப்படத் தயாரிப்பாளர்; உரையாடல் பாடல் ஆசிரியர்; பத்திரிக்கையாளர்; ஓவியர், பதிப்பாளர்; வெளியீட்டாளர்; மதி நுட்பம் மிக்க அரசியல் வித்தகர் ;பொருளியல் அறிஞர்; ஈடற்ற செயல்திறன் மிக்க சாதனையாளர், தலைசிறந்த நிர்வாகி, எனப் பல பக்கங்களில் பன்முகப் பரிணாமம் பெற்ற மாபெரும் சமூகப் புரட்சியாளர்.

"அனைத்து பிரிவு மக்களும் நலன் அனுபவித்து விட வேண்டும் .அதற்கான முயற்சிகளில் இளைஞர்கள், வாலிபர்கள், முதியோர்கள் அனைவரும் ஈடுபட வேண்டும் .சமத்துவ சமதர்ம வாழ்வு என்ற குறிக்கோளை எய்திட இலட்சியப் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய பிறந்த நாளில் தமிழக மக்கள் உள்ளிட்ட அனைத்துப் பகுதி மக்களுக்கும் விடுக்கும் வேண்டுகோள் " எனக் கடந்த காலத்தில் அவர் வாழ்ந்து வந்த பிறந்த நாளில் அரிய வேண்டுகோளாக வைத்துப் பிரகடனம் செய்தவர் கலைஞர்

எதிர்க்கட்சி வரிசையில் இருந்து, ஆளுங்கட்சிக்கு அரிய பெரிய அரசியல் அறிவுரைகள் வழங்கி வழி நடத்தியவர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் 50 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்பு வகித்து உலக அளவில் சரித்திரம் படைத்த சாதனையாளர். அதைப்போல 1967-1969 வரை அண்ணா அவர்களின் அமைச்சரவையில் பொதுப்பணி, போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்து பணியாற்றியவர். அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு 1969-1971, 1971-1976, 1989-1991, 1996 -2001, 2006-2011என ஐந்து முறை தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுத் தமிழக வரலாற்றில் பொன்னேடுகளில் பொறிக்கத் தக்க பல்வேறு நலத்திட்டங்களையும், சட்டங்களையும் கொண்டு வந்து தொலைநோக்குச் சாதனைகள் நிகழ்த்திக்காட்டிய பெருமகனார் அவர்.

இந்தியாவில் பல்வேறு குடியரசுத் தலைவர்களையும், பல பிரதமர்களையும் உருவாக்கி என்றும் ஒரு நிலையான அரசாங்கம் உருவாக அரசியல் பிதாமகனாக வழிகாட்டியாக இருந்தவர் .

எழுத்து உலகில் கலைஞர் ஜாம்பவானாக கொடி கட்டி பறந்தார்.அந்நாள் தொடக்கத்தில் சாந்தா அல்லது பழனியப்பன், (நச்சுக் கோப்பை) மகான் பெற்ற மகன், அம்மையப்பன், மணிமகுடம், தூக்கு மேடை, இரத்தக்கண்ணீர், உதயசூரியன், ஒரே இரத்தம், திருவாளர் தேசியம் பிள்ளை, சிலப்பதிகார நாடகக் காப்பியம், பரதாயணம், புனித இராஜ்ஜியம், நான் மணி மாலை, (குறு நாடகங்கள், காகிதப்பூ, பரப்பிரமம், நானே அறிவாளி, அனார்கலி, சாக்ரடீஸ், உன்னைத்தான் தம்பி, சேரன் செங்குட்டுவன் இப்படியான நாடகங்கள் எழுதிச் சமூகப் புரட்சியை உருவாக்கித் தமிழக வரலாற்றில் பகுத்தறிவுக் கொடி பறக்க ஏற்றி வைத்தவர்.

கலைஞர் எழுத்துலக வேந்தர் என்பதால், இளமை முதல் இறக்கும் வரை பல்வேறு இலக்கியப் படைப்புகளை அரசியல் படைப்புகளை இந்தத் தமிழ் உலகுக்கு தந்து விட்டு மறைந்தவர். அவர் தீட்டிய சமூகப் புதினங்கள் வெள்ளிக்கிழமை, சுருளி மலை, வான்கோழி, புதையல், ஒரே இரத்தம், ஒரு மரம் பூத்தது, அரும்பு, பெரிய இடத்துப் பெண், சாரப் பள்ளம் சாமுண்டி, நடுத்தெரு நாராயணன் என்று பல்வேறு படைப்புகள் சமுதாயத்தை பேசுகின்றனவாக விரிகின்றன.

பலிபீடம் நோக்கி, ரோமாபுரி பாண்டியன் பொன்னர் சங்கர், (அண்ணன்மார் வரலாறு), பாயும் புலி பண்டாரக வன்னியன், தென்பாண்டிச் சிங்கம் என்பன போன்ற வரலாற்றுப் புதினங்களையும் நமக்குத் தந்தவர்.

உரை ஓவியங்களாகப் பலப் பல எழுதிக் குவித்த கலைஞர், பல்கலைக்கழகங்கள் அவரை வரவேற்று இரத்தினக் கம்பளம் விரித்தன எனலாம். அவருடைய படைப்புகளை பல்வேறு பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் ஆராய்ச்சி செய்து எம்.பில், பி.எச்.டி. என பட்டங்கள் பெற்று, முனைவர் பட்டங்கள் பெற்றிருக்கின்றனர்.

அதுமட்டுமல்ல; அவர் எழுதிய கட்டுரை நூல்களான உணர்ச்சி மாலை, பெருமூச்சு, விடுதலைக் கிளர்ச்சி, களத்தில் கருணாநிதி, பேசும் கலை வளர்ப்போம், பூந்தோட்டமும் இன முழக்கமும், யாரால்? யாரால்? யாரால்? மலரும் நினைவுகள், இலங்கை தமிழா? இது கேளாய், திராவிட சம்பத்து, தலைதாழாச் சிங்கம், தந்தை பெரியார், உரிமையின் குரலும் உண்மையின் தெளிவும், இருளும், ஒளியும், சரித்திரத் திருப்பம், உண்மைகளின் வெளிச்சத்தில், மயிலிறகு என்பன போன்ற எண்ணற்ற தலைப்புகளில் வெளியிடப்பட்ட கட்டுரை நூல்கள் இன்றைக்குத் தமிழ்கூறு நல் உலகத்தில் பேசி வருகிற இலக்கிய படைப்புகளாகும்.

குறளோவியம், தேனலைகள் (கவிதை நடை கதைகள்), சங்கத்தமிழ் (கவிதை நடை விளக்கம்), திருக்குறள் கலைஞர் உரை, தொல்காப்பியப் பூங்கா இவைகள் எல்லாம் பல பதிப்புகளாக வந்து தமிழக மக்களின் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

கலைஞரின் சிறுகதை தொகுதிகள் பல்வேறு காலகட்டத்தில் எழுதப்பட்டவை. சங்கிலிச்சாமி, கிழவன் கனவு, பிள்ளையோ பிள்ளை, தப்பி விட்டார்கள்..தாய்மை, கண்ணடக்கம், நாடும் நாடகமும், பழகக்கூடை, கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள், முடியாத தொடர்கதை, 16 கதையினிலே, நளாயினி, வாழ முடியாதவர்கள், இப்படியான தலைப்பில் வெளியிடப்பட்ட சிறுகதைகள் இன்றைக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் கருவூலங்களாக நெஞ்சங்களை வருடிகொண்டிருக்கின்றன. அவை அனைத்தும் பகுத்தறிவு பேசக் கூடியவைகளாக சமூக அவல நிலையை எடுத்துக் கூறிடும் அடையாளமான சூரிய விளக்காக வெளிச்சம் தந்து கொண்டிருக்கின்றன .

உடன்பிறப்புகளுக்கு முரசொலி ஏட்டில் அவர் எழுதிய கலைஞர் கடிதங்கள், கலைஞர் எழுதிய சிறுகதைகள் சமுதாயத்தின் அவல நிலைகளைச் சுட்டிக் காட்டியும் அரும்பெரும் பெருமைகளை எய்திடவும் அவரது எழுதுகோல் பணி செய்து இருக்கிறது. கடிதம், எனும் தலைப்பில் 12 க்கும் மேற்பட்ட தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

கலைஞருடைய கவிதைகள் பல்வேறு கல்வியாளர்கள் கையாளக்கூடிய உவமை, உருவகங்கள், உரைவீச்சுகள், புதுக்கவிதை, வசனக்கவிதை எனப் பலப்பல தருணங்களில் நெஞ்சு நிமிர்த்திப் பேசுகின்றன.

கவிதை அல்ல; கலைஞரின் கவிதைகள்; வாழ்வெனும் பாதையில், (கவியரங்கக கவிதை), கவியரங்கில் கலைஞர், கலைஞரின் திரை இசை பாடல்கள், அண்ணா கவியரங்கம், இப்படியான தலைப்புகளில் நூல்களாக வெளிவந்து பாமர மக்களின் இதயங்களில வெண்சாமரம் வீசி வருடிக் கொண்டிருக்கின்றன

கலைஞர் எழுத்துத்துறைகளில் பல்வேறு வடிவம் எடுத்தவர் என்பதால் அவருடைய பயண நூல் வரலாறு, தன் வரலாறு,நேர்காணல் என்று அவர் வரலாற்று நிகழ்வுகளில் நின்று பேசி வருகின்றன. இனியவை 20, இந்தியாவில் ஒரு தீவு, ஆறு மாதக் கடுங்காவல், நெஞ்சுக்கு நீதி, (ஆறு பாகங்கள்), கையில் அள்ளிய கடல், (பல ஏடுகளில் அளித்த நேர்காணல் செய்திகள்) என்பன போன்றவை அவை.

இவை மட்டும் இன்றி, கலைஞரின் பொன்மொழிகள், சிந்தனை கருத்துக்கள், என சிதறி எங்கும் பூத்து மலர்ந்து மனம் தந்து கொண்டிருக்கின்றன. சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்கள், வயிர மணிகள், கலைஞரின் சிந்தனைச் சிதறல்கள், கலைஞரின் நவமணிகள், சிந்தனை ஆழி, கருணாநிதியின் கருத்துரைகள், கலைஞரின் கருத்துரைகள், கலைஞரின் உவமைக்களஞ்சியம், கலைஞரின் சொல் நயம், கலைஞரின் சின்னச் சின்ன மலர்கள், கலைஞரின் முத்தமிழ்ச் சிந்தனைத் துளிகள், கலைஞரின் உரையில் கண்டெடுத்த முத்துக்கள், கலைஞரின் உவமை நாயங்கள் இப்படியாகப் பேர் உருவம் எடுத்து,மேடை அரங்கங்களிலும், நூல் சுரங்கங்களிலும் பேசப்படுவதாக நிற்கின்றன

திரைப்படங்கள், 75 க்கு மேல் வசனம் எழுதி இருக்கிறார். பாடல்களும் தீட்டி உள்ளார். இராஜகுமாரி தொடங்கிய அவரது திரைப்படக் கலைப் பயணம், அவர் மண்ணை விட்டு மறையும் வரை தொடர்ந்து கொண்டே இருந்தார். மேலும் சின்னத் திரையில் இராமானுஜர் தொடர் கடைசியாக அவர் எழுதிக்கொண்டிருந்தது அனைவரின் நினைவுக்கும் வருகிற செய்தி ஆகும்.

"நான் ஒவ்வொரு அங்குலமும் நகரும்போதும், இந்தச் சமுதாயம் குன்றின் மேல் இட்ட விளக்காக ஒளி விடுவதற்கான உழைப்பையே வழங்குவதற்கு உறுதி கொண்டிருக்கிறேன். துளி வியர்வையைச் சிந்திடினும், அது காய்ந்து கிடக்கும் இன எழுச்சியை துளிர்த்திட செய்வதற்காகவே என்பது நான் நினைவூட்டுகிறேன். என் கண்ணீர் செந்நீர், உயிர் மூச்சு, என்புதோல் போர்த்த இந்த உடம்பு அனைத்துமே இந்த இயக்கத்தின் உயர்வுக்கு அர்ப்பணிக்கப் படட்டும்," என்று அவர் ஒரு முறை எழுதிக் காட்டிய அந்தச் செய்தி முற்றிலும் உண்மை என்பதை என்றும் நினைத்துப் பார்த்தால் அனைவருக்கும் தெரிய வரும்

அஃதன்றிச், சட்டமன்றச் சொற்பொழிவுகள், தமிழக அரசுச் செய்தி மற்றும் விளம்பரத்துறை வெளியீடுகள், தி.மு.க. இளைஞர் அணி போன்ற துணை அமைப்புகள் வெளியிட்ட வெளியீடுகள், தி.மு.க. தலைமை நிலைய வெளியீடுகள், இப்படியாகப் பல்வேறு நூல் வடிவங்களாக உருப்பெற்றுள்ளன. அவை யாவும் நூற்றுக்கணக்கான அளவில் வெளி வந்ததோடு, பிற மொழிகளில் மாற்றம் செய்யப்பட்டவையாகச் சாதனைகள் நிகழ்த்தி வாசிப்பவர்களுக்கு வசந்தத்தை ஏற்படுத்தித் தரும் நூல் நிலையக் கருவூல சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றன.

இவற்றைத் தவிர்த்து, அவர் மன்றங்கள், மாநாடுகள், தெருக்கள், மேடைகள், அரங்கங்கள், சட்டமன்றங்கள் என்று அவற்றில் பேசிய சொற்பெருக்குகள் யாவையும் நூல் வடிவமாக மாறி, பல்வேறு தலைப்புகளில் இடம்பெற்று வெளிவந்திருக்கின்றன.

ஏன் வேண்டும் மாநிலச் சுயாட்சி, இடஒதுக்கீடு, ஈழத்தமிழர் காவிரி நீர் பிரச்சினை, முல்லைப் பெரியாறு, கிருஷ்ணா நதிநீர், இந்தி எதிர்ப்புப் போர், தமிழ் பாதுகாப்பு பெண்களுக்கு சொத்துரிமை, ஆலயங்களில் அனைவரும் அர்ச்சகராகலாம், தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் அம்பேத்கர், சான்றோர் பெருமக்கள் என்பன போன்ற தலைப்புகளில் பல்வேறு நூல்கள் தமிழர்கள் கையில் நிரம்பி வழிகின்றன.

அவருடைய கலை உலக வாழ்க்கை 1945-46 இல் தொடங்கியது. இறுதிவரை அவர் இலக்கியத்திற்காக ஒரு பகுதியைத் தன் வாழ்க்கையில் நிகழ்த்திக் கொண்டே இருந்தார் .மற்றோர் பகுதியை அரசியலுக்காக, சமுதாயத்திற்காகத் தந்து கொண்டிருந்தார் .1996 ஆம் ஆண்டு கலைஞர் கலைத்துறைப் பங்களிப்பைப் பொன்விழாவாகக் கொண்டாடுகிற வாய்ப்பான நேரத்தில், அவர் நாடகங்களுக்கு எழுதிய உரையாடல் பற்றியும், ஏடுகளில் எழுதிய சிறுகதைகளைப் பற்றியும் பல்வேறு தருணங்களில் திரைப்படங்கள் எழுதிய உரையாடல் பற்றியும் சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டார். திருவாரூரில் தொடங்கிய அவரது பொது வாழ்க்கை... அரசியல், சமுதாயம் முன்னேற்றத்திற்கான பணிகள் மேற்கொண்டபோது, குண்டலகேசி இலக்கியத்தை ஒரு வானொலியில் நாடகமாக ஆக்கி அனுப்பி வைத்த போது, அது திருப்பி அவருக்கே அனுப்பப்பட்டது. ஒளிபரப்பப் பட இயலாது என்ற செய்தி அறிந்து, பிறகு திரைப்படத்திற்கு அவர் எழுதும் வாய்ப்பு வந்த போது, மந்திரி குமாரி படமாக எடுகக்பட்டும் புகழ் வாய்ந்தது எனப் பாராட்டும் பெற்றது என்பதையும் அவரே சொல்லி நமக்குத் தெரிந்த நற்செய்தியாகும்.

திரைப்பட உலகில் எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.இராஜேந்திரன், அறிமுகப்படுத்தி போன்ற நடிகர்களை விருதுகள் பெறவும், விழாக்கள் எடுக்கவும் தனது வசனத்தால் உச்சத்திற்கு கொண்டு சென்றவர்.

மன்னார்குடி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அண்ணா அவர்கள் மற்றொரு பொதுக்கூட்டத்துக்கு செல்ல வேண்டியவராக இருந்தார். அப்போது மேடையில் இருந்த கலைஞரைப் பார்த்து மக்களுக்கு அறிமுகப்படுத்தி, "நான் வரலாற்றின் முற்பகுதி எழுதினேன். என் தம்பி கருணாநிதி பிற்பகுதியை எழுதுவார்" என்று அடையாளம் காட்டினார்.

இந்தி மொழியை எதிர்த்து, தமிழ் மொழிக்காகப்போராடிய கலைஞரை பக்த வத்சலம் காங்கிரஸ் ஆட்சியில் பாளையங்கோட்டை சிறையில் அடைத்து வைத்திருந்தார்கள். அண்ணா அவர்கள் சிறைக்குச் சென்று கலைஞரை பார்த்துவிட்டு அன்று நெல்லையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசினார். "இந்துக்களுக்கு எப்படி காசி புனித பூமியோ, இஸ்லாமியர்களுக்கு எப்படி மெக்கா புனித பூமியோ, கிறிஸ்துவர்களுக்கு எப்படி ஜெருசலம் புனித பூமியோ, அதுபோல, என் தம்பி கருணாநிதி அடைபட்டுக் கிடக்கும் பாளையங்கோட்டை சிறை தான் எனக்குப் புனித தலம் .. யாத்திரைத் தலம்" என்று அவர் உருக்கத்தோடு பாராட்டி கலைஞரை நினைவு கூர்ந்தார்.

"எனக்கென்று ஒரு தனி வாழ்க்கை கிடையாது. ஒரு இலட்சியத்தை மையமாகக் கொண்டு சுழலும் இயக்கத்தின் வரலாற்றில் நான் ஒரு பகுதிதான். எனக்குத் தாய், தந்தை, சகோதரிகள், மனைவிகள், பிள்ளைகள் என்றிருந்தாலும், அவர்களில் சிலர் என்னை விட்டுப் பிரிந்தாலும் அல்லது என்னுடன் வாழ்ந்தாலும் நான் குடும்பம் என்று கருதுவதும் என்னையும் ஒரு அங்கமாகப் பிணைத்துக் கொண்டிருப்பதும், இந்த இயக்கம் ஒன்றுதானே தவிர, வேறு ஒன்றும் இல்லை" என்று உருக்கமாகச் சொன்ன அந்த கலைஞர்...காலம் முழுதும் உழைத்து உழைத்து தமிழகத்தை இமயச் சிகரத்தில் ஏற்றி வைத்த பெருமை அவருக்கு உரியதாகும்.

தமிழகத்தின் வரலாற்றில் இருந்து அப்பெருமகனாரை அகற்ற முடியாது... பிரிக்கவும் முடியாது. அவருடைய நூறாண்டு பிறந்த நாள் விழா இப்பொழுது கொண்டாடப்படுகிறது. அவருடைய சாதனைகள் பற்றிப் பேச